| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | |
| மாவட்டம் : | சிவகங்கை | காலம் : | 09/07/2022 | முதல் | 13/07/2022 |
| அறிக்கை எண் : | 054/ 2022 | வெளியீட்டு நாள் : | 08/07/2022 | | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33° - 38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26° - 27° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (05.07.2022 முதல் 07.07.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 13-07-2022- 08.30 வரை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 05/07 | 06/07 | 07/07 | | தேதி | நாள்-1 09/07 | நாள்-2 10/07 | நாள்-3 11/07 | நாள்-4 12/07 | நாள்-5 13/07 |
| 0.0 | 0.0 | 0.0 | | மழை (மி.மீ) | 2 | 0 | 0 | 2 | 0 |
| 38 | 33 | 36 | | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 35 | 35 | 35 | 35 | 35 |
| 27 | 27 | 26 | | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 27 | 27 | 27 | 27 |
| 7 | 8 | 8 | | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 4 | 4 | 4 |
| 78 | 67 | 64 | | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 65 | 65 | 65 | 65 | 65 |
| 52 | 54 | 54 | | | 50 | 50 | 50 | 50 | 50 |
| 15 | 15 | 13 | | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 10 | 10 | 10 |
| மேற்கு | மேற்கு | மேற்கு | | **காற்றின் திசை** | வட மேற்கு | வட மேற்கு | வட மேற்கு | தென்மே மேற்கு | தென்மே மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 9, 12 தேதி மிக லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 27° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 கி.மீ வேகத்தில், வடமேற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

.

## அடுத்த்து வாரத்திற்கானன விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (8-14 ஜூலை2022):

### மழைப்பொழிவு :

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை விட சிறிதளவு கூடுதலாக மழைப் பெய்ய வாய்ப்பு உள்ளது

### அதிகபட்ச் சி வெப்பநிலை :

அடுத்த 7 நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில், மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**இடி மின்னல் எச்சரிக்கை:**

வரும் 09.07.2022 மற்றும் 10.07.2022 தேதிகளில் தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. வயல்களில் ஆடுகளை கிடை அமர்த்துதல் மற்றும் மேய்ச்சலின் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இந்த காலகட்டத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : மிளகாய், தென்னை, கால்நடை.**

**மிளகாய்:**

- மிளகாய் பயிரில் இலைச்சுருட்டு நச்சுயிரி நோய் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் வெர்ட்டிசீலியம், 2 கிராம் பால்பெருங்காயம், 100 மில்லி புளித்த மோர் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**தென்னை:**

- மண்ணில் காணப்படுகின்ற ஈரப்பதத்தினை பயன்படுத்தி தென்னைக்கு நுண்ணுயிர் உரம் இடுதல் நல்ல பலனை கொடுக்கும்.

- தென்னை மரம் ஒன்றிற்கு 50 கிராம் அஸோஸ்பைரில்லம், 50 கிராம் பாஸ்போபாக்டீரியா உடன் 50 கிராம் (வேம்) வேர் உட்பூசணத்தை மக்கியத் தொழு உரத்துடன் கலந்து இளம் வேர்களில் படும்படி இடவேண்டும்.

**கால்நடை:**

- ஆடுகளின் எடை அதிகரிக்கவும், ஆட்டுகுட்டிகளின் இறப்பை தவிர்க்கவும் குடற்புழு நீக்கம் செய்வது மிகவும் அவசியமாகும்.
- பொதுவாக ஜீலை முதல் செப்டம்பர் மாதங்களில் தட்டைப்புழுக்களுக்கான குடற்புழு நீக்க மருந்துகளை கொடுக்க வேண்டும்.